**செ. கு. எண்: 123** **நாள்: 24.07.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 24.7.2018

காஞ்சிபுரம் மாவட்டம், பரங்கிமலை இரயில் நிலையத்தில் இன்று (24.7.2018) காலை கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து திருமால்பூர் நோக்கி சென்று கொண்டிருந்த மின்சார ரயிலில் பயணம் செய்த பயணிகள், நான்காவது நடைமேடை அருகே உள்ள தடுப்புச்சுவரில் மோதியதால், திரு.பழனி என்பவரின் மகன் திரு.சிவக்குமார், திரு.ஜெயராமன் என்பவரின் மகன் திரு. நவீன்குமார், திரு.பரத் மற்றும் அடையாளம் தெரியாத நபர் ஒருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் ஐந்து நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த செய்தி குறித்து தகவல் அறிந்தவுடன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை அதிகாரிகளை உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் ஆகியோர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறவும், காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யவும் நான் உத்தரவிட்டுள்ளேன்

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும்; முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**